DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

Calender	:	CC No. 271/2022
Miscellaneous	:	
Preliminary Register	:	
Sessions	:	
Deposition of Witness for Prosecution	:	L.W. 14 P.W.18

பெயர்	:	சுந்தரம்	தொழில்	:
தகப்பனார் பெயர் / கணவர் பெயர்	:		ஜாதி	:
கிராமம்	:		இனம்	:
தாலூக்கா	:		வயது	:
Mail ID	:		Mobile No.	:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

முதல் விசாரணை

நான் தற்போது உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் *2022* ம் வருடத்தில் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது கடந்த *20.06.2022* ம் தேதியன்று காலை *6.30* மணியளவில் நிலைய அலுவலில் இருந்த போது நான் பொறுப்பு அலுவில் இருந்த போது நேரில் ஆஜரான மதியழகன் த/பெ. சண்முக சுந்தரம் சின்ன வீரன் பட்டியை சேர்ந்தவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையம் பரிசிலனைக்கு பின் நிலைய குற்ற எண் *337/2022* ச/பி *279, 337* இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசல் ஆவணங்களை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி அதன் ஒரு நகலை உதவி ஆய்வாளர் சம்பத்குமார் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.*9* என குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. புகார்படி விபத்தில் இறந்தவர் வாகனத்தை தள்ளி கொண்டு ரோட்டை கடந்து போன போது தான் விபத்து நடந்ததாக உள்ளது என்றால் சரிதான். எதிரியின் பெயர் பின்னிட்டு கேட்டு தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ள நிலையில், எதிரியின் பெயர் யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டதாக வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் வாகனத்திற்கு எங்கு எங்கு சேதாரம் ஆனதாக வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டு அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றத்தால் *3* நாட்கள் காலதாமதாக பெறப்பட்டுள்ளது என்றால் அன்றைய தினம் *20* ம் தேதியே அனுப்பி வைக்கப்பட்டது. வழக்கில் எதிரி ஓட்டி வந்த வாகனம் டிவிஎஸ் *50* என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வேகமாக ஓட்டி வர இயலாது என்றாலும் அந்த வண்டி பழையவண்டி என்றாலுட்ம வழககில் இறந்து போனவர் அஜாக்கிரதையாக வந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார என்றாலும் சரியல்ல. எதிரி அவரது பாதையில் சரியான திசையில் சரியான வேகத்தில் வந்தார் என்றாலும் அசா.*1* கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.